# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

### Sessions Case No.18 of 2023

**Deposition of witness for : Pw11**

**Name : M. சந்துரு**

**Father's / Husbend Name :**

**Village :**

**Taluk :**

**Calling :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.05.2022 ம் தேதி நாகரசம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளராக அலுவலில் இருந்தபோது வேலம்பட்டியை சார்ந்த கிருஷ்ணன் த/பெ வெங்கட்ராம கவுண்டர், தான் ஒரு புகார் கொடுக்க வேண்டும் தனக்கு எழுத படிக்க தெரியாது என கூறியதன் பேரில் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தவதற்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. சசிகுமார் என்பவரை வாய் மொழி உத்தரவாக நியமித்து அவர் விசாரித்து கிருஷ்ணன் என்பவரிடம்வாக்கு மூலம் பதிவு செய்ததை எனது பார்வைக்கு வைத்ததன் பேரில் நாகரசம்பட்டி காவல்நிலைய குற்ற எண்

90/2022 சட்ட பிரிவுகள் 147,148,341, 323,324 மற்றும் 307 இ.த.சா படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆகும். மேற்படி வழக்கின் புலன் விசாரணைக்காக பாரூர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

முதல் தகவல்அறிக்கை எத்தனை மணிக்குபதிவு செய்யப்பட்டது என்றால் 22 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரில் உள்ள சங்கதிகளை நான் சிறப்பு காவல் உதவி ஆய்வாளருக்கு எழுத சொன்னானே என்றால் இல்லை. எங்கள் காவல் நிலையத்திற்கும் வேலம்பட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5கி.மீ இருக்கும். சரிவர விசாரணை செய்யமல் எதிரிகள் மீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன்என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.